முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - DW1

O.S.No. 102/2017

பெயர்:திரு/திருமதி : செல்வராஜ் நாள். 07.04.2021

**சாட்சி அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு 86 வயதாகிறது. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். வேலுகவுண்டர் என் அப்பா, அவரின் வாரிசுகள் தான் வாதிகள் பிரதிவாதிகள். குடும்ப நிர்வாகம் நான்தான் பண்ணினேன். வரவு செலவுகள் நான்தான் பார்த்து வந்தேன். கணக்கு வழக்குகள் எழுதும் பழக்கம் என்னிடம் இல்லை. நீங்கள் நிறைய சொத்துக்கள் விற்று இருக்கிறீர்கள் மற்றும் வாங்கியிருக்கிறீர்களா என்று சொன்னால் நான் சொத்துக்களை விற்றுள்ளேன் எந்த சொத்துக்களையும் வாங்கவில்லை. சொத்துக்களை எந்த வருடம் வரை விற்றுள்ளீர்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதிகளுக்கு இன்று வரை நான் பாகம் பிரித்து கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.5 07.03.1941ம் வருடம் ஒரு போகிய பத்திரமாகும். போகியம் போட்ட விபரம் எனக்கு தெரியாது. நீங்கள் எந்தந்த கடனுக்கு யார் யார்கிட்ட வாங்கியது, கடன் கொடுத்தது என்று ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. நீங்கள் ஏதோ ஏதோ வாங்கிய கடனிற்காக அடமானம் செய்துள்ளீர்கள் எதற்காக குறிப்பாக வாங்கினீர்கள் என்று காரணம் கூறவில்லை. ஆகையால் நீங்கள் தற்போது பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 பிராமிசரி நோட்டு எந்த காரணத்திற்காக வாங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரி. போகியம் பைசல் ஆனதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.8 முதல் பி.வா.சா.ஆ.12 வரை ஆகிய ஆவணங்களில் குடும்ப செலவிற்காக தான்

கூறப்பட்டுள்ளது மற்றும் கடனை அடைப்பதற்கு என்று எதிலும் இல்லை என்று சொன்னால் சரிதான். 1941 லிருந்து பி.வா.சா.ஆ.5 மீட்கப்பட்ட பிறகு அந்த சொத்து உங்கள் வசம் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். நீங்கள் பி.வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்து வருமானம் தர இயலாததால் மேலும் மேலும் கடன் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.5 கண்டுள்ள சொத்து 3 ஏக்கர் மற்றும் ஒரே அயிட்டமாகும். பி.வா.சா.ஆ.5ல் சுமார் 30 அயிட்ட சொத்துக்கள் கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் மொத்தம் 10 ஏக்கருக்கு மேல் பல அயிட்டங்கள் வீடு உட்பட உள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் இந்த வழக்கிற்காக சொற்ப பூமி என்று தவறாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மருதூர் மற்றும் வேறு சில ஊர்களில் உள்ள நபர்களிடம் கடன் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப கடனை அடைப்பதற்காக சொத்துக்களை விற்கும் போது அந்த ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை. 8ம் பிரதிவாதி செந்தில்குமார் பெயருக்கு 2010 மற்றும் 2011, 2013 ஆகிய வருடங்களில் கிரையம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 9ம் பிரதிவாதி கார்த்திகேயன் பெயருக்கு 2010 மற்றும் 2013 ஆகிய வருடங்களில் கிரையம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 7ம் பிரதிவாதி புகழேந்தி பெயருக்கு 2014ம் வருடத்தில் கிரையம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நான் குடும்பம் நிர்வாகம் செய்ததனால்தான் மேற்சொன்ன கிரையம் செய்து கொடுத்துள்ளேன். வாதிகள் 1961ல் கூட்டு குடும்பத்திலிருந்து தனித்தனியாக பிரிந்து போய்விட்டார்கள். நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1961ல் பிரிந்து சென்றவர்களுக்கு 2004 வரை ஏன் சொத்துக்களை விற்றீர்கள் என்று சொன்னால் வாதிகளுக்கு வழக்கு நடத்துவதற்கு வாங்கிய பணத்திற்காகத் தான்

சொத்துக்களை விற்க வேண்டியிருந்தது. நாமக்கலில் உள்ள நபர்களுக்கு வியாபாரத்திற்காக விழுப்புரம் வந்து வியாபாரம் செய்தார்கள். அதன் மூலம் அவர்களுக்கு சொத்துக்களை விற்றேன். நீங்கள் ஒப்புக்காகத்தான் சொத்துக்களை விற்றுள்ளீகள் என்றும் யாருக்காகவும் சொத்துக்களை விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சொத்துக்களை 2ம் பிரதிவாதிகள் பெயரில் அதே சொத்துக்களை மீண்டும் வாங்கியுள்ளீர்கள் இது ஏமாற்று செயல் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் உண்மையாக கிரையம் வாங்கிய நபர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எத்தனை ரூபாய்க்கு சொத்துக்களை விற்றுள்ளேன் என்ற கணக்குகள் வைத்திருக்கவில்லை. எத்தனை ரூபாய்க்கு வாங்கினேன் என்ற கணக்குகளும் என்னிடம் இல்லை. பாகஸ்தாரர்களுக்கு பாகம் தரக்கூடாது என்பதற்காக இந்த வழக்கை நீங்கள் நடத்துகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் கடன் வாங்கி எந்த தேதியில் கடன் அடைத்தேன் என்று எந்த ஆவணமும் இல்லை என்பதால் காலவரையறைக்குள் எந்த ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எல்லாம் வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.